# வலயக் கல்வி அலுவலகம் - மூதூர்

# Zonal Education Office -

## Muturஇறுதிக் கணிப்பீடு – 2021 (2022)

**தரம் : 10** | **விவசாயமும் உணவுத்தொழினுட்பவியலும்** | **நேரம் : 03மணித்தியலம்**

**சுட்டெண் :** | **பாடசாலை :**

சரியான விடையின் கீழ் கோடிடுக

01. இலங்கையின் முதலாவது பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் யாது?
   1. கல்லோயாத்திட்டம் 2. உமா ஓயாத்திடம்
   3. கொத்மலைத் திட்டம் 4. வளவகங்கைத் திட்டம்

02. பசுமைப் புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாகக் கருத முடியாதது யாது?
   1. பண்ணை இயந்திர மயமாக்கல் அதிகரித்தமை
   2. புதிய பயிர்பேதங்கள் அறிமுகம் செய்யப்பட்டமை
   3. இயற்கை வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தப்பட்டது
   4. உலக தானிய உற்பத்தி அதிகரிக்கப்பட்மை

03. எந்த மன்னனின் ஆட்சி காலத்தில் எமது நாடு “கீழைத்தேய தானியக் களஞ்சியம்'' என அழைக்கப்பட்டது?
   1. எல்லாளன் 2. துட்டகைமுனு
   3. வசபன் 4. பராக்கிரமபாகு

04. ஒரு குளத்தில் காணப்படும். நீர் மட்டம் பற்றி அறிந்து கொள்ள முக்கியமாக உதவுவது யாது?
   1. அலை தாங்கி 3. கலிங்கல் தொட்டி
   2. நீர்க்கல் 4. சுருங்கை

05. வருடாந்த மழைவீழ்ச்சிக்கமைய இலங்கை காலநிலை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது இதற்கமைய இடை வலயத்திற்குத் கிடைக்கும் வருடாந்த மழைவீழ்ச்சியின் வீச்சு யாது?
   1. 1750mm - 2500mm 2. 2500 mm - 3500mm
   3. 1500mm - 2500mm 4. 500mm - 1000mm


06. மண்ணின் நிறத்தை அறிவதற்கு பயன்படுத்துவது
   1. சிமித்தியோன் அட்டவணை 2. மன்சல் அட்டவணை
   3. உயர் இழிவு வெப்பமானி 4. ஞாயிற்று கதிர்ப்பு மானி

07. கூட்டெருக் கூடை தயாரிப்பில் உயிர்தாவர அடைப்பாக பயன்படுத்தக்கூடிய தாவரம்
   1. பூவரசு 2. கிளிசிரியா
   2. வேம்பு 4. கத்தா

08. பின்வருவனவற்றுள் தாவரத்திலிருந்து நீர் இழக்கப்படும் செயன்முறை யாது?
   1. ஆவியாதல் 2. ஆவியுயிர்ப்பு
   3.ஓடிவழிதல் 4. ஊறிப்பரவல்


09. பூத்தல் காய்தலுக்கு அதிகளவில் தேவைப்படும் போசனை மூலகம் யாது?
1. N
2. P
3. K
4. Ca

10. பின்வனவற்றுள் நீர்சிக்கன நீர்ப்பாசன முறை யாது?
1. பரவல் பாசனம்
2. துளிப் பாசனம்.
3. நிரல் பாசனம்
3. வரம்பு சால் பாசனம்

11. 
அருகில் காட்டப்பட்டுள்ள படம் பயிர்ச்செய்கை நிலத்தில் தேங்கி நிற்கும் "நீரை அகற்றுவதற்கு பயன்படும் ஓர் உபகரணமாகும் இவ் உபகரணத்தைப் பெயரிடுக?
1. தட்டு வடிகால்
2. உல்லாசப்படகு
3. நிறுத்தாடு படகு
4. மையநீக்கபப்பி

12. ஒரு மாணவன் விவசாய ஆசிரியர் ஒழுங்கு செய்திருந்த நிலையறி பரீட்சை (Spot tast) ஒன்றில் இளம்சாம்பள் நிற உருண்டையான குருணல் வடிவான வளமாக்கி யொன்றை அவதானித்தான் இவ்வளமாக்கி எதுவாக இருக்கலாம்.
1. யூரியா
2. பாறைபொசுபேற்று
3. டொலமைற்று
4. மும்மை சுப்பர் பொஸ்பேற்று

13. தாவர உரிய இழையங்கள் மீது வாழும் ஒட்டுண்ணி யாது?
1. வைரசு
2. பங்கசு
3. நெமற்றோடு
4. பைற்றோ பிளாஸ் மர்

14. 
பாடசாலைத் தோட்டத்தில் காணப்படும் மேற்படி உபகரணம் யாது?
1. குட நீர்ப்பாசனம்
2. நுண்துளைக் குழாய்ப் பாசனம்
3. மழைநீரை சேகரிக்கும் தாங்கி
4. ஆளுகை இல்லம்

15. ஒளிச் செறிவை அளவிடப் பயன்படும் அலகு எது?
1. mm
2. $kmh^{-1}$
2. நூற்றுவீதம்
3. லக்ஸ்

16. நிலக்கீழ் பகுதிகளைக் கொண்ட களைகளை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய மிகப்பொருத்தமான களைக் கட்டுப்பாட்டு முறை யாது?
1. அங்குரத்தை வெட்டுதல்
2. உயிரியல் கட்டுப்பாடு
2. தொடுகைக்களை நாசி விரிசல்
3. தொகுதிக்களை நாசி விசிறல்

17. பயற்றை, உழுந்து, கடலை, போஞ்சி, போன்ற பயிர்கள் அடங்கிய குடும்பம் யாது?
1. பொயேசியே
2. பபேசியே
3. மல் வேசியே
4. ரூட்டேசியே

18. 99% தன்மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தும் தாவரவகை யாது?
1. தக்காளி
2. நெல்
3. பயறு
4. பாகல்

19. நடுகைப் பொருட்களை வயலில் தாபித்தலே பயிர் தாபித்தலாகும் இங்கு நடுகைப் பொருளாக கருதப்படுபவை யாவை?
    1. வித்து நாற்று மாத்திரம்
    2. வித்துமாத்திரம்
    3. பதியப்பகுதிகள், வித்துமாத்திரம்
    4. வித்து, நாற்று, பதியப்பகுதிகள் மாத்திம்

20. நாற்று மேடையின் அகலம். பொதுவாக எவ்வாறு இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1. 2M | 2. 3M |
| 3. 4M | 4. 1M |

21. களைகள் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு முறைகள் காணப்பட்ட போதிலும் சட்டங்கள் மூலம் களைகள் பீடைகள் நாட்டினுள் பரவுவதையும் பிரதேசரீதியாக பரவுவதையும் கட்டுப்படுத்தும் முறை யாது?

| | |
|---|---|
| 1. பயிராக்கவியல் முறை | 2. பொறிமுறை |
| 3. உயரியல் முறை | 4. சட்டமுறை |

22. மண்ணிற்கு சேதனப் பசளைகளை இட்டு மண்ணின் பௌதிக இரசாயன உயிரின இயல்புகள் விருத்தி செய்யப்பட்டு இராசாயன உரங்கள் பயன்படுத்தப்படும். இம் முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

    1. ஒன்றினைந்த தாவரப் போசனை முகாமைத்துவம்
    2. தனிப்பசளை முகாமைத்துவம்
    3. சுழற்சி முகாமைத்துவம்
    4. சேதன முகாமைத்துவம்

23. நெல் வயல்களில் இடைப் பண்படுத்தல் உபகரணமாக பயன்படுத்தப்படும் களைகட்டும் கருவி யாது?

| | |
|---|---|
| 1. முட்கலப்பை | 2. இறகுக்கலப்பை |
| 3. ஜப்பானிய சுழல்களைகட்டி | 4. ஹரோ வகைகள் |

24. பௌதீக வானிலையாலழிதல் செல்வாக்கு செலுத்தும்காரணிகளால் ஒன்றாக பாரிய பனிக்கட்டி மலைகள் வழுக்கி விழும் போது பாறைகள் உடைவடையும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்

| | |
|---|---|
| 1. நீர் உறைதல் | 2. கிளசியர்தாக்கம் |
| 3. காற்றின் தாக்கம் | 4. அலைகளின் தாக்கம் |

25. நெற் செய்கையின் போது களைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தும் மிகச் சிறந்த முறை யாது?

| | |
|---|---|
| 1. பொறி முறை | 3. உயிரியல் முறை |
| 2. சட்ட முறை | 4. ஒன்றினைந் கட்டுப்பாட்டு முறை |

26. இலங்கையில் நெற்செய்கையில் தற்போது அதிகூடிய பங்களிப்பைச் செய்யும். மாகாணம் யாது?

| | |
|---|---|
| 1. வட மாகாணம் | 2. கிழக்கு மாகாணம் |
| 3 வட மத்திய மாகாணம் | 4. ஊவா மாகாணம் |

27. இலங்கையின் உலர் வலய பகுதியான அனுராதபுரத்திலுள்ள எப்பாவல பாறைப் படிவத்தில் இருந்து தயாரித்தப்படும் பசளை வகை யாது?

1. P பசளை　　2. N பசளை
3. K பசளை　　4. டொலமைற்றுப் பசளை

28. விவசாயச் சூழலியல் வலயங்களாகப் பாகுபடுத்தும் போது ஈரவலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விவசாயச் சூழலில் வலயங்கள் எத்தனை?

1. 11　　2. 20
3. 30　　4. 15

29 .PH பெறுமானம் 4.5 ஆகவிருக்கும் இம் மண்ணை பயிர் செய்வதற்கு உகந்த நிலைமைக்கு மாற்றுவதற்கு இடத்தக்க மிகப் பொருத்தமான பதார்த்தமாக அமைவது?

1. கந்தகம்　　2. சேதனப் பதார்த்தம்
3. ஜிப்சம்　　4. டொலமைற்று

30. அனேக ஒரு வித்தில வித்துக்கள் தரைமேல் வித்து முளைத்தலைக் காண்பிக்கும் பின்வரும் வித்துக்களில் தரைகீழ் வித்து முளைத்தலைக்காண்பிக்கும். இருவித்திலை வித்து வகைகள்?

1. பயறு　　2. போஞ்சி
3. கடலை　　3. கத்தரி

31. நெற் பயிர் செய்கைக்கு உகந்த நீர்ப்பாசன முறை யாது?

1. தூவல் நீர்பாசனம்　　2. துளிப்பாசனம்
3. பரவல் நீர்ப்பாசனம்　　3. சால் பாசனம்

32. நெரிடோக்கோ நாற்று மேடையின் நீள, அகல, உயரம் யாது?

1. 5cm x 5cm x 5cm　　2. 8cm x 8cm x 8cm
3. 10cm x 10cm x 10cm　　4. 3cm x 3cm x 3cm

33. நாற்று மேடையினை எரித்தல் மூலம் தொற்று நீக்கும் போது உருளைக் கிழங்கினை எத்தனை cm ஆழத்தில் புதைத்தல் வேண்டும்?

1.10cm　　2. 15cm
3. 5cm　　4. 12cm

34. கல்சியம், மக்னீசியம் போன்று கனிப் பொருட்களை ஒரே தடவை மண்ணுக்கு அழிக்கத்தக்க வளமாக்கி வகை யாது?

1. சுண்ணாம்புக்கல்　　2. விலங்கு என்புத்தூள்
3. டொலமைற்று　　4. பொட்டாசியம் சல்பேற்று

35. ஒளியாவர்த்தன முதன்மையின் போது ஒளியின் செல்வாக்கு பிரதானமாக ஏற்படுவது.

1. ஒளித் தொகுப்பில்　　2. பூத்தலில்
3. ஆவி உயிர்ப்பில்　　4. எல்லாம் சரி

36. PH பெறுமானம் 7.3 - 8.3 வரையுள்ள மண்ணில் காணப்படும் மண்வகை யாது?

1 அமில மண்　　2. காரமண்
3. அமில் கார மண்　　4. நடு நிலை மண்

37. நெற் தாவரத்தின் விஞ்ஞானப் பெயர் ஆங்கிலத்தில் எழுதும் சரியான முறை?

1. ORYZA SATI VAL
2. ORY ZA sativaL
3. ORY ZA sativaI
4. Oryza SATI VAL

38. பயிர்கள் வளர்ச்சி குன்றிக் குட்டையாகக் காணப்படுவதற்கும் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி இருப்பதற்கும் காரணமாக அமைவது எந்தத் தாவரப் போசனை மூலகக் குறைபாடாகும்?

1. N
2. P
3. k
4. Ca

39 இலங்கையின் ஈரவலயத்தின் மண் பொதுவாக அமிலமடையும் இதற்கான காரணம்

1. அது கடலுக்கு அண்மையில் இருப்பதால்
2. மழை நீருடன் அமில வகை மண்ணில் விழுகின்றமை.
3. மண் நுண்ணங்கிகளின் தொழிற்பாடு அதிகரிக்கின்றமை
4. மண்ணில் இருக்கும் மூல உப்புக்கள் மழை நீரினால் கழுவிக் கொண்டு சென்றமை

40. நீர் முதலிலிருந்து பயிர்ச்செய் நிலம் வரை நீரை எடுத்துச் செல்லும் வழிமுறைகளில் ஒன்று

1. கால்வாய் அல்லது குழாய் வழியாக
2. வடிகால் அல்லது கால்வாய் வழியாக
3. ஓடி வடிதல் அல்லது குழாய் வழியாக
4. கால்வாய் அல்லது ஓடிவழிதல்

(1x40=40)

பகுதி - II

முதலாம் வினாவையும் எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

1. இலங்கையின் பேண்தகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது எண்ணக்கருவுக்கு அமைய ''உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்'' "சகல பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையில் அறிவுநகர் பாடசாலை யொன்றில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளபட்டுள்ளன. நிலப்பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு, மூடுபடையிடம். திண்மக்கழிவு முகாமைத்துவம், நாற்றுமேடை உயிர்வாயு அலகு சக்திவலுக்காப்பு, சூழல் நேயபீடைக்கட்டுப்பாட்டு முறைகள், விலங்கு வளர்ப்பு

1. நிலத்தைப் பண்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக?

11. மரக்கறிப்பயிர் நாற்றுக்களைப் பெறுவதற்கென அமைக்கப்படும் பாத்தி நாற்று மேடையின் நியம அகலம் எவ்வளவாகும்?

111. இவ்வாறு நியம் அகலத்தில் நாற்றுமேடையை அமைப்பதற்கான காரணம் யாது?

IV நெற்பயிர் நாற்றுக்களை மாத்திரம் உருவாக்க பயன்படும் நாற்று மேடை வகையைக் குறிப்பிடுக?

V. பாடசாலையில் சேரும் உக்கக் கூடிய கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் பொருத்தமான முறையொன்றைக் குறிப்பிடுக?

vi மேற்படி முறை மூலம் கிடைப்பவற்றை பயிர்களுக்கு இடுவதால் ஏற்படும் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக?

vii. பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக் கூடிய இரசாயனம் அல்லாத முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

viii. மேல்நாட்டு கால்நடைவளர்ப்பு வலயத்தில் வளர்ப்பதற்கென சிபாரிசு செய்யப்படும் கறவைப்பசு வர்க்கங்கள் இரண்டைப் பெயரிடுக?

ix நீர்ச் சிக்கனத்தை மேற்கொள்ள விவசாயத் தோட்டத்தில் மேற்கொள்ளப்படும் நுட்பமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக?

x. சுதேச இலைக்கறிப்பயிர்கள் நான்கைக் குறிப்பிடுக

(2x10=20)

2. சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டது.

1. பசுமைப் புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கைக் குறிப்பிடுக?

2. இலங்கையில் விவசாயத்துக்கு உள்ள வாய்ப்புக்கள் எவை?

3. நீர்ப்பாசன முறையைத் தீர்மானிக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் மூன்றைக் கூறுக.

(4+3+3=10)

03. கடந்த சில நாட்களாக திருகோணமலை மாவட்டத்தில் பெய்த கடும் மழைகாரணமாக குளங்கள் நிரம்பியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

1. இம்மாவட்டத்திற்கு எக்காற்றின் மூலம் அதிக மழை கிடைக்கிறது
2. மழைமானியை நிறுவும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கைக் கூறுக?
3. ஒளிக்கால அளவை வகைப்படுத்தி உதாரணத்துடன் தருக?

(2+4+4=10)

04.பயிர்களுக்கு பசளையை இடுவதன் மூலம் சிறந்த விளைச்சலைப்பெற முடியும்

1.. (அ) பயிர் வளர்ச்சிக்கு அவசியமான மா போசணை மூலகங்கள் எவை?

(ஆ) பொதுவாக பயன்படுத்தக்கூடிய சேதனப்பசளை வகைகளை குறிப்பிடுக?

2. இரசாயன பசளையின் வினைத்திறனை அதிகரிக்கும் வழிகள் 3 தருக?

3. குழிமுறை கூட்டெரு தயாரிப்பதிலுள்ள பிரதிகூலங்கள் 2 தருக?

(2+2+3+3=10)

05. பயிர்களுக்கான தேவைகள் ஈடு செய்யப்படத்தக்க வகையில் சிறப்பாக நிலம் பண்படுத்தலை மேற்கொள்வதன் மூலமும் முறையாக பயிர்களைநாட்டுவதன் மூலமும் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்

1.பயிர்ச்செய்கையில் நிலம் பண்படுத்தலின் நோக்கங்கள் நான்கு தருக?

2.பயிரச்செய்கையின்போது தயாரிக்கப்படும் பாத்தி வகைகள் நான்கு தருக?

3.பயிர் நடுகையின் போது பயிர்களுக்கு இடையில் சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளியை பேணுவதன் அனுகூலங்கள் மூன்றைத் தருக?

(4+2+4=10)

06.தற்காலத்தில் பெரும்பாலானோர் வீட்டுத்தோட்ட செய்கையில் ஈடுபடுவதனால் நாற்றுமேடை நாற்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வது, இலாபமீட்டதக்க விவசாய முயற்சியாக அமைந்துள்ளது

1. நாற்றுமேடை பாத்திகளுக்கு சேதனப்பசளை இடுவதன் அனுகூலங்கள் இரண்டு எழுதுக?
2. நாற்றுமேடை பாத்திகளைத்தொற்றுநீக்கல் செய்யும் முறைகள் இரண்டு குறிப்பிடுக?
3. நாற்றுமேடை பாத்திக்கு மூடுபடை இடுவதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 எழுதுக
4. நாற்றுமேடை பாத்திகளின் மீது மூடு படையாக இடுவதற்கு பயன்படுத்தத்தக்க பதார்த்தங்கள் இரண்டு குறிப்பிடுக.

(2.5x4 =10)

1. 1
2. 3
3. 4
4. 3
5. 1
6. 2
7. 2
8. 2
9. 3
10. 2
11. 3
12. 4
13. 4
14. 3
15. 4
16. 4
17. 2
18. 2
19. 4
20. 4
21. 4
22. 1
23. 3
24. 2
25. 4
26. 3
27. 1
28. 4
29. 4
30. 3
31. 3
32. 1
33. 1
34. 3
35. 4
36. 2
37. .
38. 1
39. 4
40. 1

பகுதி-2

**01.**

1. மண்ணின் பௌதிக நிலைமை மேம்படுத்தல்

   மண் சூழலை மாற்றி அமைத்தல்

   களைக் கட்டுப்பாடு

   பசளை கலத்தல்

2. 1M

3. .பின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இலகு

4. .டபோக் நாற்றுமேடை

5. கூட்டெரு

6. .நன்மைகளை குறிப்பிடுக

7. எதிர்பினங்களை பயிரிடல், ஒளிப்பொறி,இயற்கை பீடை நாசினி திரவம் வீசுதல்,வெறுப்பூட்டும் பயிர்களை நடுதல்/காய்களுக்கு மறைப்பிடல்

8. டாரிசியன், ஜேர்சி, அயர்சயர்

9. பயிர்களுக்கு மூடு படையிடல், நுண்நீர்ப்பாசன முறைகள், மழைநீர் சேகரிப்பு நிலையம்

10. முருங்கை, அகத்தி, முல்லை, வாதநாராயணி

**02.**

1 .இயந்திர பயன்பாடு அதிகம், குறுகிய காலத்தில் அதிக விளைச்சல்,புதிய பேதங்கள் அறிமுகம், சந்தைப்படுத்தல் முன்னுரிமை, புதிய இரசாயன பயன்பாடு, அதிக விளைச்சல், புதிய பசளைகள் அறிமுகம்

2. அரச அனுசரணை, நீர்ப்பாசன தொழில்நுட்பம், விவசாயம் சார்ந்த கலாச்சாரம்

3 .பயிரிடப்பட்டுள்ள பயிர், பயிர்களின் வளர்ச்சி நிலை, நீர் பாசனத்தின் நோக்கம், மண்ணின் நீர் வடிப்பு, நீர் பாசன முறை

**03**

1 .வடகிழ் பருவக்காற்று

2. திறந்தவெளி இடமாக இருத்தல், நிலத்தில் இருந்து 30 சென்றிமீட்டர் உயரமாக காற்று, பிற விலங்குகளால் பாதிப்பு ஏற்படாத இடமாக இருத்தல் புற்கள் வெட்டப்பட்டிருத்தல்

3 . குறும்புகள் டிசம்பர் 21

நெடும் பகல் ஜுன் மாதம் 21

**04**

1.1.C,H,O,N,P,K,S,Ca ,Mg, S

2.பசுந்தாட்பசளை, விலங்கு பசளை, கூட்டு பசளை, திரவ பசளை

2 .சேதனப் பசளை சேர்த்தல்

பகுதி பகுதியாக இடல்

சிபாரிசு செய்யப்பட்ட அளவு

சரியான நேரத்தில் இடல்

3 .குழி வெட்டுவதற்கு பணம் செலவாகும, காற்றூட்டல் சீராக கிடைக்காமை, மழைநீர் உட்புகுத்தல,புரட்டுவதில் சிரமம, துர்நாற்றம் ஏற்படும்

**05**

1 .வேறு வளர்ச்சி இலகுவாக நடைபெற மண்ணை இறக்குதல்

கற்கள்,வேர்களை அகற்றுதல்

மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்த

நீர் வடிப்பை மேம்படுத்தல்

களைகளை அகற்றுதல், பீடைகளை அகற்றுதல்

2 .உயர்பாத்தி, தாழ்த்தி. வரம்புசால் பாத்தி ,தனிநடுகைக்குழி

3 .வேர் வளர்ச்சிக்கு இடவசதி

கிளைகள் வளர்ப்பதற்கு போதிய இடவசதி

நிழல் ஏற்படாது

வினைத்திறனான நிலப் பயன்பாடு

**06.**

1 .போசனைக்கு அவசியமான சகல பதார்த்தங்களையும் வழங்குதல்

நீர்பற்றுதிறன் மேம்படுத்தல்

pH பெறுமானத்தை மாறாது பேணல்

நுண்ணங்கியின் குடித்தொகை அதிகரித்தல்

2 .சூரிய வெப்பத்தின் மூலம் எரித்தல் மூலம் கொதிநீர் மூலம் இரசாயன பதார்த்தம்

3. ஈரலிப்பு பேணுதல்

வெப்பநிலை பேணுதல்

பறவைகளினால் வித்துக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை குறைத்தல்

மழை , நீர்பாசனத்தால் ஏற்படும் பாதிப்பை குறைத்தல்

4 .உடன் வைக்கோல் மானா புல் சுத்தமான சரக்கு